கூடுதல் சார்பு நீதிமன்றம், கரூர்.

முன்னிலை:திருமதி.K.L.பிரியங்கா, B.A., B.L., (Hons)

கூடுதல் சார்பு நீதிபதி, கரூர்.

திருவள்ளுவராண்டு 2056 ஸ்ரீ விசுவாவசு வருடம், கார்த்திகை மாதம் 10-ஆம் நாள்

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் நாள் புதன்கிழமை

**இடைக்கால மனு எண். 02/2025**

**இல்**

**அசல் வழக்கு எண். 334/2022**

கோவிந்தராஜ் ...மனுதாரர்/ பிரதிவாதி

**//எதிர்//**

சிவக்குமார் ......எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது கடந்த 12.11.2025-ம் தேதியன்று இறுதிவிசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.தனசேகரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N. பிரகாஷ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதத்தையும் செவிமடுத்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய பரிசீலனையில் இருந்து வந்ததில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

## உத்திரவு

மனுதாரர்/பிரதிவாதி தரப்பில், நீதிமன்ற ஆணையரை நியமித்து கடந்த 24.09.2021 ம் தேதியிட்ட வா.சா.1 கடனுறுதி சீட்டின் அசல் ஆவணத்தை அவரிடம் ஒப்படைத்தும், சின்னதாராபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஏற்படுத்தப்பட்ட கடந்த 07.03.2022 தேதியிட்ட விற்பனை பத்திரத்தில் இருக்கும் திரு. S. கோவிந்தராஜ் என்பவரின் அசல் கையொப்பங்கள் மற்றும் கட்டைவிரல் ரேகைகளை வைத்தும், மேற்படி இரண்டு ஆவணங்களையும் தடயவியல் நிபுணரின் ஆய்விற்கு அனுப்பி வைத்து ஒப்பீடு செய்து,

உத்தரவு பிறப்பிக்க கோரி இம்மனு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி. எதிர்மனுதாரர் மேற்படி அசல் வழக்கினை கடந்த 24.09.2021 ம் தேதியிட்ட கடனுறுதி சீட்டின் அடிப்படையில் ரூ.9,61,200/- தொகையை மீட்டெடுப்பதற்காக பொய்யான வழக்கை மனுதாரர் மீது தாக்கல் செய்துள்ளார். எதிர்வழக்குரையில் மேற்படி கடனுறுதி சீட்டினை பொறுத்து மறுத்துள்ளார். மனுதாரர் ஒருபோது கடனுறுதி சீட்டினை ஏற்படுத்தவில்லை, எந்தவொரு தொகையையும் பெறவில்லை. மனுதாரருக்கு, எதிர்மனுதாரர் யார் என்றே தெரியாது. எதிர்மனுதாரரை மனுதாரர் பார்க்கவும் இல்லை, பேசியதும் இல்லை, யார் என்றே தெரியாது என்றும், குறிப்பிட்டுள்ளார். போலியான கடனுறுதி சீட்டினை வைத்து பணத்தை பெறுவதற்காக வழக்கை தாக்கல் செய்துள்ளார். இந்நிலையில் மேற்படி கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பத்தையும், தனது கையொப்பத்தையும் நிபுணரின் கருத்துரைக்காக அனுப்ப வேண்டியது அவசியமாகிறது. வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு 3 ஆண்டுகள் ஆனபோதும், எதிர்மனுதாரர் நிபுணரின் கருத்துரைக்காக எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. கடந்த 24.09.2021 ம் தேதியிட்ட கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பம் மனுதாரருடையதல்ல என்பதை நிரூபிக்க வேண்டி, கடந்த 07.03.2022 ம் தேதியன்று சின்னதாராபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் மனுதாரர், L. தங்கவேல் என்பவருக்கு ஆதரவாக ஏற்படுத்தப்பட்ட விற்பனை ஆவணத்தில் உள்ள கையொப்பம் மற்றும் கைரேகை புத்தகம் எண்.1 மற்றும் ஆவண எண்.631/2022 என்ற ஆவணங்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க வேண்டி இம்மனுவினை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார்.

**3) <u>எதிர்மனுதார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u>:-**

**3.1)** மனுதாரரின் மனு பொய்யானது. மனு தள்ளுபடி செய்யத்தக்கது. மனு சட்டப்படியும் சங்கதிகள் படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. மனுவில் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகளை இந்த எதிர்மனுதாரர்கள் கடுமையாக மறுக்கிறார்கள். மனுதாரர் மனுவில் பத்தி 3 முதல் 11 வரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் பொய்யானவை என்று முற்றிலுமாக மறுக்கப்படுகிறது. மனுதாரர், 24.09.2021 ம் தேதியன்று கடனுறுதி சீட்டினை ஏற்படுத்தி கொடுத்துள்ளார். 28.02.2022 ம் தேதியன்று வழக்கறிஞர் அறிவிப்பு மனுதாரருக்கு அனுப்பட்டு, மேற்படி அறிவிப்பை கடந்த 08.03.2022 ம் தேதியன்று பெற்றுக் கொண்டுள்ளார். கடந்த 22.04.2022 ம் தேதியன்ற தாவா தாக்கல் செய்யப்பட்டது. 02.01.2025 ம் தேதியன்று எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் அசல் வழக்கினை இழுத்தடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் கடனுறுதி சீட்டினை கடந்த 2022 ம் தேதியன்று ஏற்படுத்தியுள்ளார். மனுதாரர் கையொப்பத்தை நிரூபிக்க மேற்படி கடனுறுதி சீட்டு ஏற்படுத்தப்பட்ட வருடத்திலேயே ஏற்படுத்தப்பட்ட ஆவணத்தில் உள்ள கையொப்பத்தை சரிபார்ப்புக்கு அனுப்ப வேண்டும்.

**3.2)** மனுதாரர், அவரது பதில் அறிவிப்பிலும், எதிர்வழக்குரையிலும் கடனுறுதி சீட்டினை பொறுத்து ஒப்புக்கொண்டு தற்போது இம்மனுவினை மேற்படி அசல் வழக்கை காலம் கடத்த வேண்டும் என்ற எண்ணத்தில் தாக்கல் செய்துள்ளார். இம்மனு காலம் தாழ்த்தி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது. எனவே, இம்மனுவினை இந்த எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய

வேண்டும் என்று எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**4)** மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா? அல்லது இல்லையா? என்பதே ஆகும்.

**5) தீர்வு**

**5.1)** இம்மனுவானது, நீதிமன்ற ஆணையரை நியமித்து கடந்த 24.09.2021 ம் தேதியிட்ட வா.சா.1 கடனுறுதி சீட்டின் அசல் ஆவணத்தை அவரிடம் ஒப்படைத்தும், சின்னதாராபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஏற்படுத்தப்பட்ட கடந்த 07.03.2022 தேதியிட்ட விற்பனை பத்திரத்தில் இருக்கும் திரு. S. கோவிந்தராஜ் என்பவரின் அசல் கையொப்பங்கள் மற்றும் கட்டைவிரல் ரேகைகளை வைத்தும், மேற்படி இரண்டு ஆவணங்களையும் தடயவியல் நிபுணரின் ஆய்விற்கு அனுப்பி வைத்து ஒப்பீடு செய்து, உத்தரவு பிறப்பிக்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று அறியமுடிகிறது. மனுதாரரின் கூற்று என்னவென்றால், மனுதாரருக்கு, எதிர்மனுதாரரை யார் என்றே தெரியாது என்றும், அவர் தாவா கடனுறுதி சீட்டை எழுதி கொடுக்கவில்லை என்றும், தாவா கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பமானது தன்னுடையது அல்ல என்பதை மனுதாரர் நிரூபிப்பதற்காக இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதேயாகும். இதற்கு மாறாக, எதிர்மனுதாரரின் மறுப்புரை என்னவென்றால், இம்மனுவானது காலம் தாழ்த்தி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதேயாகும்.

**5.2)** இருதரப்பு வழக்குகளையும் நன்கு பரிசீலிக்கும் போது, அசல் வழக்கானது தாவா கடனை திரும்ப செலுத்த கோரி எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டு, எழுவினா

வனைவதற்காக நிலுவையில் உள்ள நிலையில், இம்மனுவானது மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று அறியமுடிகிறது. மனுதாரர்/பிரதிவாதி, தாவா கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பமானது தன்னுடைதல்ல என்பதை நிரூபிக்கும் பொருட்டு இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். ஆனால், மனுதாரர்/பிரதிவாதி அசல் வழக்கின் எதிர்வழக்குரையில், எந்த ஒரு இடத்திலும், தாவா கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்று மறுதளிக்கவில்லை. மாறாக, எதிர்வழக்குரையில், பிரதிவாதியின் முக்கிய மறுப்புரை என்னவென்றால், நிரப்பப்படாத கடனுறுதி சீட்டுக்களை பிரதிவாதி பங்குதாரர் என்ற முறையில் மங்களம் மனோகரன் என்பவரிடம் கொடுத்து வைத்திருந்ததாகவும், அதை ஒரு S.P. தங்கவேல் என்பவர் அபகரித்து நிரப்பப்படாத கடனுறுதி சீட்டுக்களின் அடிப்படையில் பல்வேறு வழக்குகள் தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி S.P. தங்கவேல் தான் வாதியை வைத்து தாவா கடனுறுதி சீட்டை உற்பத்தி செய்து பிரதிவாதி மீது இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்பதேயாகும்.

**5.3)** மேற்படி எதிர்வழக்குரை சங்கதிகளில் மேலே சொன்னது போல் தாவா கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பத்தை பிரதிவாதி எவ்விடத்திலும், குறிப்பிட்டு மறுதளிக்காத நிலையில், தற்போது தனது எதிர்வழக்குரை சங்கதிகளுக்கு சம்மந்தமில்லாத வகையில் சாட்சியத்தினை உருவாக்குவதற்காக இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது ஏற்புடையதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுவதால், இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதல்ல என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**6) முடிவாக,**

இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 26.112025-ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

K L PRIYANGA Digitally signed by K L PRIYANGA DN: cn=K L PRIYANGA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**கரூர்.**

**மனுதாரர், எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**-இல்லை

K L PRIYANGA Digitally signed by K L PRIYANGA DN: cn=K L PRIYANGA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**கரூர்.**